**மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற தொகுதி 2 சேவைப் பிரிவின் இல்லத் தாய் (House Matron) பதவித் தரம் III இற்காகத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் (திறந்த முறை)**

மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற தொகுதி 2 சேவைப் பிரிவின் இல்லத் தாய் பதவித் தரம் III இற்கு நியமிக்கப்படுவதற்காகத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி 2026. 10.02 ஆகும்.

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2019.05.28 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற - தொகுதி 2 சேவைப் பிரிவின் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மற்றும் பதவி உயர்த்துவதற்கான திட்டத்தின் விதந்துகாப்புகளுக்கு அமைவாக 2026.01.27 ஆம் திகதியன்று தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள பெண் விண்ணப்பதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**03. 04 பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரிமையுடையது. அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 இற்கு அமைவாக இப்பதவிக்குரிய சம்பளக் குறியீடு மற்றும் சம்பளத் திட்டம் பின்வருமாறு அமையும்:**
**MN 01 – 2025, 45230 – 10 X 540 – 11 X 630 – 10 X 890 – 10 X 1190 – 78360/=**

(i) கல்வித் தகுதிகள் - சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு (02) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலாவது (பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

(ii) அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வயது எல்லை - 2026.01.27 ஆம் திகதியன்று 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

(iii) தொழில்சார் தகுதிகள் - இலங்கை சமூக சேவை கல்லூரி, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் இளைஞர்களைப் பராமரித்தல் தொடர்பான ஓராண்டுப் பாடநெறியைப் பயின்றிருத்தல்.

(iv) அனுபவம் - பொருந்தாது.

(v) உடற்தகுதி - ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) ஏனையவை -

i. இலங்கைப்பிரிஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரிகள் நற்பண்பு உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள் கோரப்படும் முடிவுத் திகதிக்கு உடனடியாக முந்தைய 3 ஆண்டுகள் காலத்தில் மத்திய மாகாண சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட பிரஜையாக இருத்தல் வேண்டும்.
iv. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தேவையான அனைத்துத் தகுதிகளும், அத்தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆட்சேர்க்கும் முறை -

(i) மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சுச் செயலாளரால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானோர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு

உடற்தகுதி மற்றும் தகுதிகள் பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) எழுத்துப் பரீட்சை -

| பாடங்கள் | பாடத்திட்டம் | அதிகபட்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவு (திறனறிப்பரீட்சை) | விண்ணப்பதாரியின் மொழி மற்றும் எண்கணிதத் திறன்களைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்படும் வினாத்தாள். | 100 | 40 |
| 02. பொது அறிவு | தேசிய மற்றும் சர்வதேச, சமூகப் பொருளாதார, அரசியல் மற்றும் தற்போதைய தகவல்களை உள்ளடக்கிய வினாத்தாள். | 100 | 40 |

(iii) விண்ணப்பங்கள்கோரும்முறை - விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026.10.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், த.பெ. எண் 121, மத்திய மாகாண சுகாதார அமைச்சு, சங்கராஜ மாவத்தை, கண்டி எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில் "மத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற

தொகுதி 2 சேவைப் பிரிவின் இல்லத் தாய் III ஆம் தரத்திற்குத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

திகதி 2026.09.11
ஜெகத் அதிகாரி
செயலாளர்
சுகாதார, சுதேசிய வைத்திய, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சு
மத்திய மாகாணம்